TNVR090004592019

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
முன்னிலை .. திரு. R.V. ராஜகுமார், B.L.,
சார்பு நீதிபதி, விருதுநகர்.

2024–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 10–ஆம் நாள் புதன் கிழமை
இ.ம.எண்.5/2023
இன்
முதலேற்பு வழக்கு எண்.119/2019

கோபால் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. பூரணம்
2. ராஜரத்தினம்
3. ராஜகுரு
4. ராஜ்குமார் ... எதிர்மனுதாரர்கள்/11 முதல் 14 பிரதிவாதிகள்

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தில் 04.09.2023 அன்று தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. J. மாரிக்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. J. ரகுராமன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்

<u>**உத்தரவு**</u>

மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர்கள்/11 முதல் 14 வரையிலான பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ, பிரதிநிதிகளோ, வாரிசுகளோ

பிராது சொத்தில் எந்தவித மாறுபாடும் செய்யாமலும், எந்த ஒரு கட்டுமானத்தையும் கட்டாமலும் வழக்கு முடியும் வரை தற்போது உள்ள நிலையிலே தொடர்ந்து இருக்க இடைக்கால தடை உத்தரவு கட்டளை பிறப்பிக்கக்கோரியும், இம்மனு மீது இறுதி உத்தரவு பிறப்பிக்கும் வரை ஒரு Ad Interim Injunction பிறப்பித்து நிரந்தர தடைஉறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கக் கோரியும், கட்டளை 39 விதி 1 & 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம் :–</u>

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. பிராது சொத்து குறித்து விளம்புகை பரிகாரமும், பிராது சொத்தில் எதிர்மனுதாரர்கள் அமைத்துள்ள கம்பி வேலையை அகற்றவும், பிராது சொத்து குறித்த மோசடி ஆவணங்களை ரத்து, அதன் குறிப்புக்களை நீக்கம் செய்யவும் பரிகாரம் கேட்டு மனுதாரரால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிராதில் கூறியுள்ள சங்கதிகளை இந்த அபிடவிட்டின் ஒரு பாகமாக கருத வேண்டும். பிராது சொத்தும் அதனுடன் இணைந்த பல சொத்துக்களும் மனுதாரரின் தாயார் ரமக்கம்மாளுக்கு 1.1492/1959 என்ற கிரைய பத்திரத்தின் மூலம் பாத்தியப்பட்டு அவரால் 28.01.1970–ஆம் தேதிய நன்கொடை பத்திரத்தின் (நன்கொடை ஆவண எண்.1.83/1970) மூலம் மனுதாரருக்கும், மனுதாரரது சகோதரர் மேற்படி சூரையா என்ற பவுன்ராஜ்க்கும் பிரிவினையின்றி கூட்டாக பாத்தியப்பட்ட சொத்தாகும். பிராது சொத்தின் பழைய சர்வே எண்.51/3, இதன் மொத்த விஸ்தீர்ணம் ஏக்கர் 1 சென்ட் 40. இதில் மனுதாரரும், அவரது சகோதரர் மேற்படி சூரையா என்ற பவுன்ராஜ் சேர்ந்து கூட்டாக ஏக்கர் 1 சென்ட் 22 அளவுள்ள நிலத்தை பல்வேறு நபர்களுக்கு கூட்டாக விற்பனை செய்தது போக தென்பக்கம் உள்ள எஞ்சிய 18 சென்ட் நிலத்தில் வடக்கு

பக்கம் இருக்கும் 9 சென்ட் மனுதாரருக்கும், தெற்கு பக்கம் 9 சென்ட் நிலம் மேற்படி சூரையா என்ற பவுன்ராஜ்க்கும் என்று வாய்மொழியாக 1989–ல் பாகம் செய்து கொண்டு தற்போது வரை மனுதாரர் அவரது பாகமான பிராது சொத்தில் விவசாயம் செய்து வருகிறார்.

பிராது சொத்தை மனுதாரர் தனது தாயார் ஞாபகார்த்தமாக விற்பனை செய்யாமல் கைவசம் வைத்திருக்க விரும்பியுள்ளார். மேற்படி நிலத்தை மனுதாரர் விற்பனை செய்ய மாட்டேன் என்பதால் மனுதாரருக்கு தெரியாமல் மனுதாரரின் சகோதரர் சூரையா என்ற பவுன்ராஜ் அவருக்கு பாத்தியப்பட்ட 9 சென்ட் நிலத்துடன் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட பிராது சொத்தையும் சேர்த்து அவருக்கு தனித்து பாத்தியப்பட்டது என பொய்யாக கூறி 20.09.1990–ஆம் தேதிய கிரைய ஆவணத்தின் (கிரைய ஆவண எண்.1.1501/1990) மூலம் 6–ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார். 6–ஆம் பிரதிவாதி 11.04.2003–ஆம் தேதிய கிரைய ஆவணத்தின் (கிரைய ஆவண எண்.1.1351/2003) மூலம் 7–ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார். 7–ஆம் பிரதிவாதி 03.04.2009–ஆம் தேதிய கிரைய ஆவணத்தின் (கிரைய ஆவண எண். 1.2426/2009) மூலம் 8–ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார். 8–ஆம் பிரதிவாதி 07.09.2009–ஆம் தேதிய பொது அதிகார ஆவணத்தின் (கிரைய ஆவண எண்.1.908/2009) மூலம் 9–ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்ய அதிகாரம் வழங்கியதன்படி 9–ஆம் பிரதிவாதி 24.03.2010–ஆம் தேதிய ஆவணத்தின் (கிரைய ஆவண எண்.1.2244/2010) மூலம் 10–ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார். 10–ஆம் பிரதிவாதி 05.08.2019–ஆம் தேதிய கிரைய ஆவணத்தின் (கிரைய ஆவண எண்.1.4286/2019) மூலம் எதிர்மனுதாரர்கள்/11 முதல் 14 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்துள்ளார்.

மேற்கண்டுள்ள ஆவணங்கள் சரியான மறுபயன் இன்றியும், மனுதாரரின் அனுமதியின்றியும் மனுதாரருக்கு தெரியாமல் ஏற்பட்டுள்ள காரணங்களினால்

6 முதல் 10 பிரதிவாதிகள் பிராது சொத்தின் அனுபவத்தை எடுத்துக் கொள்ளாமல் ஆவண அளவில் மட்டும் உரிமையாளராக இருந்துள்ளார்கள். அதனால் மேற்படி ஆவணங்களின் விபரம் மனுதாரருக்கு தெரியாமல் பிராது சொத்திலும் அதனுடன் இணைந்துள்ள (அருகில் உள்ள சொத்திலும்) சொத்திலும் மனுதாரர் விவசாயம் செய்து வந்துள்ளார்.

எதிர்மனுதாரர்கள்/11 முதல் 14 பிரதிவாதிகளின் உறவினர் பாலசுப்பிரமணி என்பவர் பெரிய அரசியல் பிரமுகர் என்பதால் அவர் மூலம் பிராது சொத்தை கைப்பற்றி விடலாம் என்ற கெட்ட எண்ணத்தில் பிராது சொத்தை வாங்கியுள்ளார்கள். அதனால் தான் எதிர்மனுதாரர்கள் மேற்படி பாலசுப்பிரமணியன் மூலம் மனுதாரரிடம் பிராது சொத்தின் அனுபவத்தை கேட்டு 19.08.2019–ஆம் தேதியன்று பேரம் பேசியுள்ளார்கள். அதை மனுதாரர் ஏற்றுக்கொள்ளவில்லை. மேற்படியார்கள் பேசியதன் அடிப்படையில் 20.08.2019–ஆம் தேதிய ஆவணங்கள் மூலமாகவும், 21.08.2019–ஆம் தேதிய வில்லங்க சான்றிதழ் மூலமாகவும் பிராது சொத்து குறித்து ஏற்படுத்தப்பட்ட மேற்படி மோசடி ஆவண விபரங்களை மனுதாரர் தெரிந்து கொண்டார். மேற்படி மோசடி ஆவண விபரங்கள் குறித்து 05.09.2019–ஆம் தேதியன்று மேற்படி அசல் வழக்கு 1 முதல் 5 பிரதிவாதிகளிடம் கேட்டபோது, மேற்படியார்கள் மேற்படி வில்லங்கத்தை நிவர்த்தி செய்து கொடுப்பதாக கூறியிருந்தார்கள். எந்தவித மேல் நடவடிக்கையும் எடுக்காமல் தொடர்ந்து விவசாய பணிகளை செய்து வந்துள்ள நிலையில் 05.10.2019–ஆம் தேதியன்று எதிர்மனுதாரர்கள்/11 முதல் 14 பிரதிவாதிகள் அடியாட்களுடன் வந்து பிராது சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து, இரும்பு வேலி அமைத்தபோது மனுதாரர் தடுத்தார். அப்போது எதிர்மனுதாரர்களும், மேற்படி பாலசுப்பிரமணியனும் தடுத்ததால் வன்கொடுமை சட்டத்தின் கீழ் பொய் வழக்கு போட்டு சிறையில்

தள்ளி விடுவதாக மிரட்டியுள்ளார்கள். அதனால் அவர்களின் மிரட்டலுக்கு பயந்து பிராது சொத்திலிருந்து விவசாய பயிர்களை அறுவடை செய்யும் வரை பொறுத்திருக்குமாறு கூறியதையும் மேற்படியார்கள் ஏற்றுக்கொள்ள மறுத்து பிராது சொத்தில் யாரும் நுழைய முடியாத வகையில் இரும்பு கம்பியால் முள் வேலி அமைத்து சென்று விட்டார்கள். (எந்த பக்கத்திலும் நுழைவு வாயிலே இல்லாமல் முற்றிலும் யாருமே செல்ல முடியாத வகையில் கம்பிவேலி அமைத்துள்ளார்கள்) பிராது சொத்தானது மனுதாரரது அனுபவத்தில் இருந்து வருகிற காரணத்தினால் தான் எதிர்மனுதாரர்கள் யாருமே நுழைய முடியாத வகையில் வேலி அமைத்துள்ளார்கள். அதனால் அதை தடுப்பதற்காகவும், வில்லங்க ஆவணங்களை ரத்து செய்வதற்காகவும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை நடத்தினால் மேற்படி எதிர்மனுதாரர்களுக்கு பாதகம் ஏற்படும் எனக்கருதி வழக்கை நடத்தக்கூடாது என்பதற்காகவும், மனுதாரரை இடைஞ்சல் செய்ய வேண்டும் என்பதற்காகவும்01.09.2023–ஆம் தேதியன்று மனு சொத்தில் இருந்த கம்பி வேலியை அகற்றினார்கள். அதை மனுதாரர் தடுக்க முயன்றதால் தகாத வார்த்தைகள் பேசி, தாக்க முயன்றார்கள். அதனால் 01.09.2023–ஆம் தேதியன்று விருதுநகர், வச்சக்காரப்பட்டி காவல் நிலையத்தில் மனுதாரர் புகார் மனு கொடுத்துள்ளார். இது சிவில் தன்மையுடைய வழக்கு என்பதால் நீதிமன்றம் மூலம் தீர்வு கண்டு கொள்ளும்படி அனுப்பி விட்டனர்.

கடந்த 02.09.2023–ஆம் தேதியன்று காவல் நிலையத்தில் விசாரணை முடிந்து வெளியே வரும்போது கூட 11 முதல் 14 பிரதிவாதிகள் மனு சொத்தில் இருக்கும் வேலியை அகற்றிவிட்டு வீடு கட்டப்போவதாகவும், யாரிடம் சொன்னாலும் வேலையை நிறுத்த மாட்டோம் என்று மிரட்டி சென்றார்கள். 03.09.2023–ஆம் தேதியன்று மனு சொத்திலிருந்த அனைத்து வேலியையும் அகற்றி வீடு கட்ட பூமி பூஜை செய்தார்கள். அவர்களை தடுத்தால் ஜாதி

சொல்லி திட்டியதாக வன்கொடுமை சட்டத்தில் பொய் வழக்கு போட்டு சிறையில் தள்ளி விடுவார்கள். அவர்களின் சட்டத்திற்கு முரணான செயல்களை நீதிமன்றத்தால் மட்டுமே தடுக்க முடியும். மேலும், தாவா சொத்து தற்போது இருக்கும் நிலையிலேயே மேற்படி அசல் வழக்கு முடியும் வரை இருந்ததால் தான் வழக்கின் உண்மை நிலை தெரிய வரும். இந்த மனுவில் Prima Facie Case–ம், Balance of Convenience–ம் மனுதாரர் பக்கமே உள்ளது. இந்த மனு அனுமதிக்கப்படா விட்டால் மனுதாரருக்கு அளவிட முடியாத கஷ்டம் நஷ்டம் ஏற்படும். அதனை நஷ்டயீட்டினால் ஈடு செய்ய முடியாது. எனவே, எதிர்மனுதாரர்கள்/11 முதல் 14 பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ, பிரதிநிதிகளோ, வாரிசுகளோ பிராது சொத்தில் எந்தவித மாறுபாடும் செய்யாமலும், எந்த ஒரு கட்டுமானத்தையும் கட்டாமலும், வழக்கு முடியும் வரை தற்போது உள்ள நிலையிலே தொடர்ந்து இருக்க இடைக்கால தடை உத்தரவு கட்டளை பிறப்பிக்கக்கோரியும், இம்மனு மீது இறுதி உத்தரவு பிறப்பிக்கும் வரை ஒரு Ad Interim Injunction பிறப்பித்து நிரந்தர தடைஉறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடக்கோரியும், இந்த மனுவில் Prima Facie Case–ம் Balance of Convenience–ம் மனுதாரர் பக்கமே உள்ளது என்றும், இந்த மனு அனுமதிக்கப்படாவிட்டால் மனுதாரருக்கு அளவிட முடியாத கஷ்டம் நஷ்டம் ஏற்படும். அதனை நஷ்டயீட்டினால் ஈடு செய்ய முடியாது. எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

3. <u>எதிர்மனுதாரர்கள்/11 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம்</u>

மனுதாரரின் மனு தவறானதாகும். மனுப்படி எந்த பரிகாரமும் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல. மனு அவிடவிட்டு பாரா 3, 4 ஆகியவற்றில் கூறியுள்ளதை மனுதாரரே சட்டப்படியும், தகுந்த ஆவணங்கள்

வாயிலாக நிரூபணம் செய்ய கடமைப்பட்டவராவர். தாவா ஆவணங்கள் சரியான மறுபயன் இன்றியும், வாதியின் அனுமதியின்றியும், வாதிக்கு தெரியாமல் ஏற்பட்டுள்ள காரணங்களினால் 6 முதல் 10 பிரதிவாதிகள் பிராது சொத்தின் அனுபவத்தை எடுத்துக்கொள்ளாமல் ஆவண அளவில் மட்டும் உரிமையாளராக இருந்துள்ளார்கள் என்றும், அதனால் மேற்படி ஆவணங்களின் விபரம் வாதிக்கு தெரியாமல் பிராது சொத்திலும் அதனுடன் இணைந்துள்ள (அருகில் உள்ள சொத்திலும்) சொத்துக்களிலும் விவசாயம் செய்து வந்தார் என்று கூறுவது 11 முதல் 14 பிரதிவாதிகளால் ஆட்சேபிக்கப்படுகிறது. கடந்த 20.09.1990–ஆம் தேதிய கிரைய ஆவணத்தின் மூலம் பிராது சொத்தானது 6–ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்யப்பட்டு அதன்பின் பல நபர்களிடம் பல்வேறு தேதிகளில் கைமாறி தற்போது 11 முதல் 14 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட 05.08.2019–ஆம் தேதி முதல் தாவா சொத்தானது 11 முதல் 14 பிரதிவாதிகளின் அனுபவத்திலும், ஆளுமையிலும் இருந்து வருகிறது. தற்போது வரை தாவா சொத்தினை 11 முதல் 14 பிரதிவாதிகள் உரிமை ரீதியாகவும், உடைமை ரீதியாகவும் அனுபவம் செய்து வருகிறார்கள். தாவா சொத்தானது வாதியின் அனுபவத்திலும், ஆளுமையிலும் இருப்பதாக கூறுவது பொய்யாகும். அதனை மனுதாரரே தகுந்த சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டவராவர்.

மனு அவிடவிட்டு பாரா 6–ல் கூறியுள்ளதும் ஆட்சேபிக்கப்படுகிறது. அதை மனுதாரர் நிரூபணம் செய்ய கடமைப்பட்டவராவர். மனுச்சொத்தை ஆக்கிரமிக்க வேண்டிய அவசியம் 11 முதல் 14 எதிர்மனுதாரர்களுக்கு ஏற்படவில்லை. மனுதாரர் நீதிமன்றத்தில் தகாத பலன் பெறுவதற்காக இல்லாத மற்றும் நடக்காத சங்கதிகளைக்கூறி கரை படிந்த கரங்களுடன் மேற்படி சங்கதியை உற்பத்தி செய்து பரிகாரம் கோரியுள்ளார். தாவா சொத்தில்

மனுதாரருக்கு அனுபவமோ, உரிமையோ ஏதும் இல்லாத நிலையில் எதிர்மனுதாரர்களுக்கு தனித்து பாத்தியப்பட்ட பிராது சொத்தில் உரிமை கோரவோ, மனுவில் கண்ட பரிகாரம் கோரவோ தகுதியோ, அருகதையோ கிடையாது. மனுதாரருக்கு மனுவிலோ, அசல் வழக்கிலோ முதல்நிலை நோக்கு கிடையாது. மனுச்சொத்தில் வில்லங்கங்கள் கடந்த 1990–ஆம் ஆண்டே சட்டப்படி எதிர்மனுதாரர்களுக்கு முன்பாக கிரையம் பெற்றவர்களுக்கு பாத்தியப்பட்டிருந்தது. மனுதாரர் காலதாமதத்துடன் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனவே, அசல் வழக்கு காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. மனு சொத்திற்குரிய அசல் ஆவணங்கள் எதையும் மனுதாரர் தாக்கல் செய்யாததிலிருந்தே மனுதாரருக்கு இம்மனுவை தாக்கல் செய்ய சட்டப்படி எந்த உரிமையும் இல்லை என்பது தெளிவாகிறது. எனவே, சமநிலை வசதி (Balance of Convenience) இந்த எதிர்மனுதாரர்களுக்கு சாதகமாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தங்களுக்கு பாத்தியப்பட்ட மனு சொத்துக்களில் சட்டப்படி கட்டுமானம் செய்ய உரிமை உள்ளவர்கள் ஆவார்கள். மேற்படி கட்டுமானம் செய்யக்கூடாது என்று மனு பரிகாரம் சட்டப்படி கோர இயலாது என Bine Murlidhar Hemdev Vs. Kanhaiyalal Lokram Hemdev, 1999 (3) CCC 84 (SC) என்ற வழக்கில் தெளிவாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் தாவா சொத்து தற்போது உள்ள நிலையிலே தொடர்ந்து இருக்க இடைக்கால தடை உத்தரவு கட்டளை மற்றும் நிரந்தர தடை உத்தரவு கட்டளை பிறப்பிக்ககோரி மனு தாக்கல் செய்துள்ளது பொய்யானதாகும். எதிர்மனுதாரர்கள் மனு சொத்தில் கட்டுமானம் கட்டுவதால் சொத்தின் அமைப்பு எந்த விதத்திலும் மாறப்போவது கிடையாது. மனுதாரர் அசல் வழக்கில் விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளார். மேற்படி பரிகாரமானது இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சிகளையும் தீர விசாரித்தால் மட்டுமே

உண்மைத்தன்மை தெரிய வரும். இந்த நிலையில் வேண்டுமென்றே எதிர்மனுதாரர்களை வீண் அலைக்கழிவு செய்வதற்காக எந்த ஒரு முதல் நோக்கும் இல்லாமல் இம்மனு தாக்கல் செய்துள்ளதால் இம்மனு பரிகாரம் சட்டப்படி மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல. எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை எதிர்மனுதாரர்கள்/11 முதல் 14 பிரதிவாதிகளின் அதிகபட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

4. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6. தற்போது மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரமானது மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதா என்பதே இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை.

7. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. மேற்படி மனுதாரர்/வாதி அசல் வழக்கை மேற்படி மனு சொத்தானது மனுதாரர்/வாதிக்கு பாத்தியப் பட்டது என விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக மேற்படி மனுவின் எதிர்மனுதாரர்களை தாவா சொத்திலிருந்து அப்புறப்படுத்தி சுவாதீனத்தை ஒப்படைக்கக்கோரியும், மேலும், ம.சா.ஆ.2 முதல் ம.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களை செல்லாது என விளம்புகை செய்தும், மேற்படி ஆவணங்களின் பதிவை நீக்கம் செய்ய, அசல் வழக்கின் 15–ஆம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்கும்படியும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

8. இவ்வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பு வழக்கானது தாவா சொத்தானது

மனுதாரர்/வாதியின் தாயார் ராமக்கம்மாளுக்கு 1.1492/1959 என்ற கிரைய பத்திரத்தின் மூலம் பாத்தியப்பட்டு, அவரால் கடந்த 28.01.1970–ஆம் தேதிய ஆவண எண்.1.83/1970 என்ற நன்கொடை பத்திரத்தின் வாயிலாக மனுதாரர்/ வாதிக்கும், அவரது சகோதரருக்கும் கூட்டாக பாத்தியப்படுத்தி கொடுத்ததாகவும், மேற்படி தாவா சொத்தின் பழைய சர்வே எண்.51/3 என்றும், அதன் மொத்த விஸ்தீரணம் ஒரு ஏக்கர், 40 செண்ட் என்றும், மேற்படி நிலத்தில் ஒரு ஏக்கர் 22 சென்ட் அளவுள்ள நிலத்தை மேற்படி மனுதாரர்/ வாதியும், அவரது சகோதரர் சூரையா என்ற பவுன்ராஜ் சேர்ந்து கூட்டாக பல்வேறு நபர்களுக்கு விற்பனை செய்து விட்டதாகவும், மீதமுள்ள 18 செண்ட் நிலத்தில் வட பகுதி 9 செண்ட் மனுதாரர்/வாதிக்கும், தென்பகுதி 9 செண்ட் சூரையா என்ற பவுன்ராஜ்க்கும் என்று வாய்மொழியாக 1989–ஆம் வருடம் பாகம் செய்து கொண்டு, தற்போது வரை அவரது பாகமான பிராது சொத்தில் விவசாயம் செய்து வருவதாகவும், மேற்படி பிராது சொத்தில் அவருக்குரிய பாகத்தையும் சேர்த்து மேற்படி மனுதாரர்/வாதியின் சகோதரர் சூரையா என்ற பவுன்ராஜ் அவருக்கு பாத்தியப்பட்ட 9 சென்ட் நிலத்துடன் மேற்படி மனுதாரர்/வாதியின் நிலத்தையும் சேர்த்து மேற்படி அசல் வழக்கின் 6–ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து விட்டார் என்றும், மேற்படி அசல் வழக்கின் 6–ஆம் பிரதிவாதி, 7–ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து விட்டார் என்றும், மேற்படி அசல் வழக்கின் 7–ஆம் பிரதிவாதி, 8–ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து விட்டார் என்றும், மேற்படி அசல் வழக்கின் 8–ஆம் பிரதிவாதி, 9–ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து விட்டார் என்றும், மேற்படி அசல் வழக்கின் 9–ஆம் பிரதிவாதி, 10–ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து விட்டார் என்றும், மேற்படி அசல் வழக்கின் 10–ஆம் பிரதிவாதி, 11 முதல் 14 பிரதிவாதிகளான மேற்படி மனுவின் 1 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு தற்பொழுது விற்பனை செய்து விட்டார்கள் என்றும், மேற்படி கிரையங்கள் மறுபயனற்றது என்றும், சொத்தின் அனுபவம் மனுதாரர்/வாதியிடம் உள்ளது என்றும், மனுதாரர்/வாதி

கடந்த 02.09.2023–ஆம் தேதியன்று 11 முதல் 14 பிரதிவாதிகள் மேற்படி மனு சொத்தில் இருக்கும் வேலியை அகற்றிவிட்டு வீடு கட்டப்போவதாக சொல்லியிருக்கிறார்கள் என்றும், அவர்கள் சொல்லியது போலவே 03.09.2023–ஆம் தேதியன்று மேற்படி மனு சொத்திலிருந்த அனைத்து வேலிகளையும் அகற்றி பூமி பூஜை செய்ததாகவும், மேற்படி தாவா சொத்து தற்பொழுது இருக்கும் நிலையில் இருந்தால் தான் வழக்கின் உண்மை நிலை தெரிய வரும் என்றும், எந்தவித மாறுபாடும் செய்யாமலும், எந்த கட்டுமானத்தைம் கட்டாமலும், வழக்கு முடியும் வரை இடைக்கால தடையுறுத்துக்கட்டளை பிறப்பிக்கும்படி கோரியுள்ளார்.

**9.** அதேபோல் மேற்படி மனுதாரர்/வாதி தரப்பில் அவரது வழக்கை நிரூபிக்கும் வகையில் மேற்படி மனுதாரர்/வாதியின் தாயார் மனுதாரர்/வாதிக்கும், அவரது சகோதரருக்கும் கடந்த 28.01.1970–ஆம் தேதியிட்டு எழுதிக்கொடுத்த நன்கொடை பத்திரம் ம.சா.ஆ.1 ஆகவும், மனுதாரர்/வாதியின் சகோதரர் சூரையா என்ற பவுன்ராஜ், 6–ஆம் பிரதிவாதிக்கு 20.09.1990–ஆம் தேதி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் ம.சா.ஆ.2 ஆகவும், 6–ஆம் பிரதிவாதி, 7–ஆம் பிரதிவாதிக்கு 11.04.2003–ஆம் தேதி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் ம.சா.ஆ.3 ஆகவும், 7–ஆம் பிரதிவாதி, 8–ஆம் பிரதிவாதிக்கு 03.04.2009–ஆம் தேதி எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரம் ம.சா.ஆ.4 ஆகவும், 8–ஆம் பிரதிவாதி, 9–ஆம் பிரதிவாதிக்கு 07.09.2009–ஆம் தேதி எழுதிக்கொடுத்த பொது அதிகாரம் ஆவணம் ம.சா.ஆ.5 ஆகவும், 9–ஆம் பிரதிவாதி, 10–ஆம் பிரதிவாதிக்கு 24.03.2010–ஆம் தேதி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் ம.சா.ஆ.6 ஆகவும், 10–ஆம் பிரதிவாதி, 11 முதல் 14 பிரதிவாதிகளுக்கு 05.08.2019–ஆம் தேதி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் ம.சா.ஆ.7 ஆகவும் தாக்கல் செய்துள்ளார்.

**10.** அதேபோல் மேற்படி மனுதாரர்/வாதி தரப்பில் தாவா சொத்தின் வில்லங்க

சான்றிதழ் ம.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்துள்ளார். மேற்படி தாவா சொத்து மனுதாரர்/வாதியின் அனுபவத்தில் இருக்கிறது என்பதற்கான புகைப்படங்களை ம.சா.ஆ.9 மற்றும் ம.சா.ஆ.10 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ம.சா.ஆ.9 மற்றும் ம.சா.ஆ.10 ஆகிய புகைப்படங்களை மட்டும் வைத்து தாவா சொத்து மனுதாரர்/வாதியின் அனுபவத்தில் இருக்கிறது என்று கருத முடியாது. மேலும், தாவா சொத்து சம்மந்தமாக மேற்படி 4–ஆம் எதிர்மனுதாரர் மீது புகார் கொடுத்ததற்கான புகார் மனு இரசீது ம.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்துள்ளார்.

**11.** இவ்வழக்கில் மேற்படி மனுதாரர் தாவா சொத்தை தானும், தனது சகோதரரும் ஒவ்வொருவருக்கும் தலா 9 சென்ட் என வாய்மொழியாக 1989–ல் பாகம் செய்து பிரித்து கொண்டதாக கூறியுள்ளார். மேற்படி தாவா சொத்தில் 1989–ஆம் ஆண்டு பாகம் செய்து கொள்ளப்பட்டதாக கூறப்பட்டுள்ள நிலையில் மேற்படி தாவா சொத்தானது மனுதாரர்/வாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்பதற்கான வருவாய் துறை ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல் அல்லது வரி இரசீதுகள் போன்ற எதுவும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யவில்லை.

**12.** மேலும், தாவா சொத்தின் மீதான உரிமை குறித்து மேற்படி மனுதாரர்/வாதிக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டு, மேற்படி மனுதாரர்/வாதி அவருக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில், முதலில் தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டுள்ளது என்பதை தீர்மானிக்க வேண்டியுள்ளது. இவ்வழக்கில் மேற்படி தாவா சொத்தின் உரிமை மூலமானது சாட்சிகளின் விசாரணைக்கு பின்னர் தான் தெரிய வரும்.

**13.** மேலும், கடந்த 2019–ஆம் ஆண்டு முதலே தாவா சொத்தில்

பிரதிவாதிகள் வேலி அமைத்துள்ளதாக மனுதாரர் சொல்லியுள்ள நிலையில் மேற்படி மனுதாரர்/வாதிக்கு எவ்வித முதல்நிலை நோக்கோ அல்லது ஈடு கட்ட முடியாத இழப்போ ஏற்பட வாய்ப்பு இல்லை. எனவே, இந்த சூழ்நிலையில் இந்த மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என தீர்மானித்து இந்த மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது.

இறுதியாக, இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கம் செய்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2024–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 10–ஆம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் :–** இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 28.01.1970 | ராமக்கம்மாள், மனுதாரர் மற்றும் அவரது சகோதரருக்கு எழுதிக்கொடுத்த நன்கொடை பத்திரம் – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 20.09.1990 | சூரையா என்ற பவுன்ராஜ், சுப்பையா நாயுடு என்ற சுப்பா நாயக்கர் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | 11.04.2003 | சுப்பையா நாயுடு என்ற சுப்பா நாயக்கர், மேகலா என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | 03.04.2009 | மேகலா, தன்ராஜ் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | 07.09.2009 | தன்ராஜ், கவிதா என்பவருக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணம் – சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.6 | 24.03.2010 | கவிதா, முத்தையா என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.7 | 05.08.2019 | முத்தையா என்பவர் பூரணம், ராஜரத்தினம், ராஜகுரு, ராஜ்குமார் ஆகியோர்களுக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரம் – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.8 | –– | வில்லங்க சான்றிதழ் – கணினி நகல் |
| ம.சா.ஆ.9 | –– | பிராது சொத்தில் மனுதாரர் விவசாயம் செய்வதற்குரிய புகைப்படங்கள் (3 எண்ணம்) – அசல் |
| ம.சா.ஆ.10 | –– | பிராது சொத்தில் இருக்கும் ஆக்கிரமிப்பை காட்டும் புகைப்படங்கள் (4 எண்ணம்) – அசல் |
| ம.சா.ஆ.11 | 02.09.2023 | மனுதாரருக்கு வச்சக்காரப்பட்டி காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட புகார் மனு ரசீது – அசல் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–**

இல்லை

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
இ.ம.எண்.5/2023 இன்
மு.வ.எண்.119/2019
உத்தரவு நாள். 10.07.2024